CAREERINDIA

## XII - CODE 106

## Marking Scheme - Tamil - 2018

Marks: 100

### பகுதி - அ

1. (அ) பிழைகளைத் திருத்தி எழுதுக: (Any five) 5

(i) மெட்ரோ பணியால் வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது.
(ii) இலவச இருதய நோய் மற்றும் விழிப்புணர்வு முகாம்.
(iii) காலி மனைகள் விற்பனைக்கு உள்ளன.
(iv) வருமானம் பெருக செலவை குறைக்க வேண்டும்.
(v) தங்க நாணயங்கள் பரிசாக கிடைத்தன.
(vi) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.
(vii) நல்ல நண்பர்கள் உறவை விட மேலானவர்கள்.

(ஆ) வல்லின மெய்யிட்டுத் திருத்துக: (Any five) 5

(i) பாவையர்க்குப் பயந்து ஓடிடச் செய்யேன்.
(ii) தொடக்க காலத்தில் நாட்டுப்புறவியல் வளர்ச்சி அடைந்திருந்தது.
(iii) அந்தத் கண்ணாடியை எடுத்து இப்படித் திருப்பு.
(iv) செய்யாத் தொழிலுக்குத் தண்டனை பெற்றேன்.
(v) பலவற்றைக் கேளுங்கள்; சிலவற்றைப் பேசுங்கள்.
(vi) இந்தத் தனிப்பேருந்து கல்லூரிச் சாலைக்குச் செல்லும்.
(vii) பங்குச் சந்தைப் பற்றி தமிழ்க் கட்டுரை ஒன்று வரைக.

இ. கூறியவாறு மாற்றி எழுதுக: (Any five) 5

(i) தன்னலம் கருதாது உதவுபவர்கள் தெய்வம் என்று மக்களால் போற்றப்பட்டனர்.
(ii) இனிப்புப் பதார்த்தங்களைக் குழந்தைகள் விரும்பி உண்ணாமல் இருக்க மாட்டார்கள்.

(அல்லது)

இனிப்புப் பதார்த்தங்களைக் குழந்தைகள் விரும்பி உண்ணாமல் இருந்ததே இல்லை.
(iii) தமிழரசி போட்டியில் கலந்து கொண்டாள்.
தமிழரசி போட்டியில் வெற்றி பெற்றாள்.
(iv) என் தாய் வயிறார உண்டாள்.
(v) இப்பாடலை நான் எழுதினேன்.

www.careerindia.com

CAREERINDIA

(vi) சங்கரன் தன் தந்தையிடம், “நாளை நான் வெளியூர் செல்வேன்” என்று கூறினான.

(vii) இளவரசி தினம்தோறும் தன் வீட்டு வேலைகளைச் செய்வித்தாள்.

2. (அ) பத்தி வினாக்களுக்கு விடையளிக்க: 5x2=10

(i) நாட்டில் வன்மையும் கொடுமையும் நடக்க சுயநலமிக்கவர்கள் காரணம். அவர்களால் நாட்டு மக்களிடையே விரோத உணர்வும், கோப உணர்வும் மேலோங்கிக் காணப்படுகின்றன.

(ii) “கோபம் கோழைத்தனம். அது மனம் பாதிப்பையும் பதைபதைப்பையும் காட்டும்” என்கிறார் தத்துவஞானி மார்க்கஸ் அரேலியஸ்.

(iii) விரோதத்தையும் கோபத்தையும் அடக்கி வைத்திருப்பவர்களையும் விரோதத்தாலும் ஆத்திரத்தாலும் இரைச்சல் போடுகிறவர்களையும் நரம்புத் தளர்ச்சி நோய் பாதிக்கும்.

(iv) நமக்குப் பிடிக்காத செயல்களையும், மனிதர்களையும் பற்றி நாம் கவலைப்படுதல் கூடாது. “தனக்குப் பிடிக்காத மனிதர்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே கிடையாது” என்பார் ஜெனரல் ஐசன் ஹோவர்.

(v) அமைதியைக் கெடுக்கும் கோபத்தையும் விரோதத்தையும் கைவிட்டு அமைதியாக வாழ்ந்தால் ஆனந்த வாழ்வு பெறலாம்.

(ஆ) <u>நேர்காணல்</u> 5

1. மாணவர்களின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப வினா விடைகள் அமைந்திருக்கலாம்.
2. தொடக்க வினா, முடிக்கும் வினா விடைகள் ஆகியவை மரபுப்படி அமைந்திருத்தல் வேண்டும்.
3. தலைப்பு சார்ந்தே வினா விடைகள் அமைதல் வேண்டும்.
4. Positive- கொண்டே விடைகள் அமைதல் வேண்டும்.
5. தொடக்கம், முடிவு வினாவிடைகள் அன்றி தலைப்பு சார்ந்த ஐந்து வினாவிடைகளாவது அமைந்திருத்தல் வேண்டும்.
6. எளிமையும் புரிதலும் சிறப்பும் அவசியம்.

(அல்லது)

(i) செந்தமிழ்நாடு என்ற இன்பச் சொல்லைக் கேட்டவுடனேயே காதினில் தேன்வந்து பாயும்.

(ii) எம் தந்தையர் வாழ்ந்த நாடு எங்கள் பாரத நாடு என்று பேசும்பொழுதே மனதில் சக்தி பிறக்கும்.

(iii) ஆசிரியர் மணியாரம் என்று சிலப்பதிகாரக் காப்பியத்தைக் குறிப்பிடுகின்றார்.

www.careerindia.com

CAREERINDIA

(iv) வள்ளுவரை இந்த உலகமே பெற்றதால் தமிழ்நாடு வான்புகழ் பெற்றது.
(அல்லது)
வள்ளுவரை ஈன்றதால் தமிழ்நாடு வான்புகழ் பெற்றது.
(v) நதி - ஆறு

3. பொதுக் கட்டுரை: 10
தலைப்பு
குறிப்புச்சட்டகம் - 1
முன்னுரை - 1
பக்கத் தலைப்புகள் - 7
முடிவுரை - 1.

4. கடிதம்: (விண்ணப்பக் கடிதம்) 10
தலைப்பு
இடம் } 1/2
தேதி
அனுப்புநர் முகவரி - 1
பெறுநர் முகவரி - 1
விளித்தல் - 1/2
பொருள் - 1/2
Content கருத்து
(i) பகுதிவாழ் அறிமுகம்
(ii) தலைப்பு சார்ந்த செய்தி } 5 1/2
(iii) Requesting
நன்றி, இப்படிக்கு, கையொப்பம் (முடிப்பு) - 1/2
உறைமேல் முகவரி - 1/2

கடிதம்: (நண்பனுக்குக் கடிதம்)
தலைப்பு
இடம், தேதி } - 1
அனுப்புநர் பெயர் முகவரி
விளித்தல் - 1/2
கருத்து:
(i) நலம் கேட்டல் - 1 1/2
(ii) தலைப்பு சார்ந்த செய்தி 4 } 6 1/2
(iii) Ending / Completing - 1
இப்படிக்கு, உன் அன்புள்ள, கையொப்பம் - 1
உறைமேல் முகவரி - 1

www.careerindia.com

CAREERINDIA

<u>பகுதி - ஆ</u>

5. <u>உரைநடை - விடைகள்</u> 2x10=20

(i) கோலரிட்ஜ் கருத்து - சிறந்த முறை என்று கூறுதல் (மறுப்பு) பயனற்றது - வோர்ட்ஸ்வொர்த் கருத்து - (மறுப்பு) எல்லா இடங்களிலும் நிகழக்கூடியது அல்ல - கீட்ஸ் கருத்து - கவிதையைப் பற்றிய கவிதையே (மறுப்பு) - ஜான் ரஸ்கின் கருத்து - மாறுபடும் இலக்கணம் (மறுப்பு).

(ii) <u>இசைத்தமிழ்</u>

எது இசைத்தமிழ்? - பண்டைய இசைத்தமிழ் நூல்கள் - இக்காலம் / இடைக்காலத்தில் தோன்றிய இசைத்தமிழ் நூல்கள்.

<u>நாடகத்தமிழ்</u>

எது நாடகத்தமிழ்? - நல்லறிவு புகட்டுவதே நாடகத்தின் நோக்கம் - எளிய மக்களுக்கும் பயன் - கேள்வி இன்பம் - காட்சி இன்பம்.

(iii) <u>முயற்சி</u>

எளிய முயற்சி ஏற்றதன்று - புலியின் பெருமுயற்சி வேண்டும் - பெரிதும் முயன்று பொருள் தேடுதல்.

<u>ஈகைப்பண்பு</u>

இரப்பது இழிவு - இயலாதார்க்கு ஈதல்.

(iv) நீதிகளைக் கூற எழுந்தவை நீதி நூல்கள் - இவ்வாறு நடத்தல் வேண்டும், இவ்வாறு நடக்கக் கூடாது என்று விலக்கிச் செல்வது நீதிநூல்களின் இயல்பு (etc....their own points)

6. <u>Annotation:</u> செய்யுள் அடியொற்றி வினாவிடை. 5

(i) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் பாண்டியன் பரிசு.
ஆசிரியர் பாவேந்தர் பாரதிதாசன். - 2

(ii) வேலன் அன்னத்திடம் கூறியது - 2

(iii) ஆசிரியரின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம் - 1

(அல்லது)

(i) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் அகநானூறு. ஆசிரியர் மதுரை மள்ளனார்- 2

(ii) திணை: முல்லை
துறை: வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது - 2

(iii) புல்லை நிரம்பத்தின்ற குதிரை - 1

www.careerindia.com

CAREERINDIA

7. செய்யுள் வினா விடை: 2x5=10

(i) ஆசிரியர் குறிப்பு - மீனின் முள் போன்ற மயிர் - தோல் சுருங்கிய கன்னம் உடைய பயனற்ற முதுமை உடையோரே! எமன் உயிரைக் கவர வரும்பொழுது வருந்திப் பயனில்லை - உயிருடன் வாழும்பொழுதே நன்மை செய்யுங்கள் - அல்லது தீமை செய்யாமல் இருங்கள் - இதுவே அனைவரும் விரும்புவது - மறுமையில் நற்கதி சேர்க்கும் வழி இதுவேயாகும்.

(ii) வினைத்திட்பம் என்பது யாது? - கூறுகள் - அருமை - சிறப்பு - எய்தும் பயன் - வினைத்திட்பம் உடையவரை அறிதல் - வினை செய்யும் வழி - வினைத்திட்பம் இல்லார் இழிவு

(iii) <u>கண்ணகி சூளுரை</u> - முறையில்லாத அரசன் -யான்பட்ட துன்பம் - என் கணவன் கள்வன் என்று குற்றம் - என் காற்சிலம்பினைக் கைக்கொள்ள எண்ணி கணவனைக் கொன்றார்கள் - கணவனை உயிருடன் காண்பேன் - இனிய மொழிகளைக் கேட்பேன் - அவ்வாறு கேட்காவிட்டால் என்னை இகழ்க என்பன போன்ற சூளுரைகள்.

<u>நகர் மாந்தர் கூறியன</u>
வளையாத செங்கோல் வளைந்தது - பாண்டிய மன்னன் அரசியல் அழிவுற்றது - குளிர்ந்த வெண்கொற்றக்குடை வெம்மையுற்றது - இப்புதிய தெய்வம் வருகையால் என்ன தீங்கு விளையுமோ? போன்ற கூற்றுகள்.

(iv) கண்டேன் சீதையை - குலப் பெருமை வாய்ந்தவர் - உயர்குணச் சீதாப்பிராட்டியைக் கண்டேன் - தவத்தின் பயனாய்த் தோன்றிய தையல் - கண்ணீர்க் கடலுள் சீதை.

8. <u>துணைப்பாடம் - கட்டுரை</u> 10

தலைப்பு - குறிப்புச் சட்டகம் - முன்னுரை - பக்கத் தலைப்புகளுடன் மையக் கருத்துகள் சிதையாமல் எதார்த்த மொழி நடை - முடிவுரை.

9. <u>பண்புநலன்</u> 5

குறிப்பிட்ட பாத்திரப்படைப்பின் குணங்களை வெளிப்படுத்தும் விதமாக கருத்துகள் (with some diologues) இடம் பெறல் வேண்டும்.

--ooOoo--

www.careerindia.com

CAREERINDIA

குறிப்பு: (மதிப்பிடும் முறைகள்)

வினா எண்கள் 15 (5+5+5)

1. அ, ஆ, இ - முழு மதிப்பெண்கள்
   (பிழைகளுக்கு ஏற்றவாறு மதிப்பெண்கள் குறைக்கலாம்)

2. அ, ஆ - முழு மதிப்பெண்கள் வழங்கலாம் 15 (10+5)

3. 9 1/2 மதிப்பெண்கள்

4. 10 மதிப்பெண்கள் - முழு மதிப்பெண்

5. உரைநடை - கருத்துகள் அனைத்தும் நல்ல மொழி நடையிலும் தெளிவாகவும் இடம்பெற்றிருத்தல் வேண்டும். சரியான வாக்கியங்கள் சொந்த நடையிலும் அமைந்திருக்கலாம் - 19 1/2

6. 5 முழு மதிப்பெண்கள்

7. செய்யுள் - கருத்துகள் அனைத்தும் நல்ல மொழி நடையிலும் தெளிவாகவும் இடம் பெற்றிருத்தல் வேண்டும். சரியான வாக்கியங்கள் சொந்த நடையில் கருத்துகள் சிதையாமல் அமைந்திருக்கலாம். - 10

8. 9 1/2 மதிப்பெண்கள்

9. 5 மதிப்பெண்கள்

--oOo--

பொதுக் குறிப்பு:

பொதுக்கட்டுரை - உரைநடை - செய்யுள் ஆகியவை மொழிநடை வாக்கியங்கள் சிறப்பாக இல்லையெனில் கண்டிப்பாக மதிப்பெண்கள் குறைக்கப்பட வேண்டும்.

--ooOoo--

www.careerindia.com